**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 18–ம் நாள்
2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01–ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 39/2025**

**CNR.NO.TNMY-07-000049-2025**

எக்விடாஸ் சுமால் பைனான்ஸ் பேங்க்
கிளை மேலாளர் க. அருள்குமார் **...வாதி**

...எதிர்...

மைதிலி **...பிரதிவாதி**

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 12.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. M. சுதா அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், கடந்த 07.07.2025 அன்று பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டு, ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா தொகை ரூ.20,465/–க்கு பின்வட்டியுடன் வாதிக்கு பிரதிவாதியிடமிருந்து கிடைக்கும்படி உத்தரவிடக்கோரியும், செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **வாதியின் வழக்குரைச் சுருக்கம் :–**

**(1.1)** வாதியான எக்விடாஸ் சுமால் பைனான்ஸ் பேங்க் லிமிட். நிறுவனங்கள் சட்டம் 1956ன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் மற்றும் வங்கி ஒழுங்குமுறை சட்டம் 5 ன் பிரிவு (C) ன் கீழ் இந்திய ரிசர்வு வங்கியிடமிருந்து



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.01 17:57:10 +0530

தகுதியான உரிமம் பெற்ற இதன் கிளை அலுவலகம், 37/20, தெற்கு ரத வீதி, சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம் முகவரியில் இயங்கி வருகிறது என்றும்,

**(1.2)** வாதி வங்கி வாடிக்கையாளர்களுக்கு தனிப்பட்ட சேவைகள் மற்றும் அடமான கடன், தொழிற் கடன், வாகன கடன் மற்றும் மைக்ரோ நிதி கடன்கள் வழங்கி வருகின்றது என்றும், வாதி வங்கி நிறுவனத்தை பிரதிவாதி அவர்களது சுய உதவி குழு மூலம் அணுகி கூட்டுக்கடன் கேட்டதன் அடிப்படையில் பிரதிவாதிக்கு **14266220** நம்பரில் கடன் வழங்கப்பட்டதாகவும், பிரதிவாதி 0000080922 மையத்தின் உறுப்பினர் என்றும்,

**(1.3)** வாதி வங்கியானது பிரதிவாதிக்கு கடன் கொடுப்பதற்கு முன்னால், பிரதிவாதி சமர்ப்பித்த அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து பிரதிவாதிக்கு அசல் கடன் தொகை ரூ.40,000/– மற்றும் அதற்கு வட்டி விகிதம் 24% என்று 17.07.2023 தேதியன்று கடன் வழங்கப்பட்டதாகவும், அதை மாத தவணை ரூ.2020/– என 25 மாதங்கள் செலுத்துவதாக ஒப்புக்கொண்டதாகவும்,

**(1.4)** பிரதிவாதி கடன் ஒப்பந்தம் மற்றும் கடனை திருப்பி செலுத்தும் ஒப்பந்தப்படி கடன் நிலுவை தொகை ரூ.20,465/– செலுத்த தவறியதால் வழக்கறிஞர் மூலம் 08.01.2025 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டதாகவும், வாதி கொடுத்த அறிவிப்பிற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை, வழக்கு கடன் தொகையும் செலுத்தப்படவில்லை என்றும், வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>**

**இவ்வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?**

**3.** இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி வங்கியின் கிளை மேலாளர் திரு. அருள்குமார் என்பவர் **வா.சா.1** ஆக சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பில் **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.01 17:57:16 +0530

செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி ஒருதலைப்பட்சம் ஆக்கப்பட்டுள்ளதால் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் ஏதும் இல்லை.

**4.** இவ்வழக்கில் வாதி தரப்பு வாதுரை, வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை பரிசீலனை செய்து இவ்வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்வு காண்கிறது.

**5. தீர்வு :-**

**(5.1)** வாதி வங்கி தரப்பில், வாதியிடம் பிரதிவாதி 17.07.2023 அன்று ரூ.40,000/−த்தை கடனாக பெற்றுக் கொண்டு, மாத தவணையாக ரூ.2020/− என 25 மாதங்கள் செலுத்துவதாக ஒப்புக்கொண்டதாகவும், ஒப்பந்தப்படி கடன் நிலுவைத்தொகை ரூ.20,465/− செலுத்த தவறியதால் வழக்கறிஞர் மூலம் 08.01.2025 அன்று அறிவிப்பு வழங்கப்பட்ட பிறகும், வாதி கொடுத்த அறிவிப்பிற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை, வழக்கு கடன் தொகையும் செலுத்தப்படவில்லை என்றும்,

**(5.2)** எனவே தாவா தொகை ரூ.20,465/−க்கு பின்வட்டியும் மற்றும் செலவுத்தொகையும் வாதிக்கு, பிரதிவாதியிடமிருந்து கிடைக்கும்படி உத்தரவிட வேண்டும் என்றும் வாதி தரப்பில் வாதம் செய்யப்பட்டது.

**(5.3)** இவ்வழக்கில் பிரதிவாதி தோன்றாத் தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளார். வாதி தனது தரப்பு வழக்கை நிருபணம் செய்யும் வகையில் வாதி வங்கியின் கிளை மேலாளர் திரு. அருள்குமார் என்பவர் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்து, வாதி தரப்பில் **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**(5.4)** வாதி வங்கியானது அதன் கிளை மேலாளருக்கு அதிகாரம் வழங்கியுள்ள விபரமானது 14.11.2024 தேதியிட்ட **வா.சா.ஆ.3** ஆன அதிகார கடிதம் மூலமாகவும், வாதியிடம் பிரதிவாதி கடன் பெற்றுள்ளார் என்ற விபரமானது முறையே **வா.சா.ஆ.1** ஆன 18.07.2023 தேதியிட்ட கடன் ஒப்பந்தம்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.01 17:57:21 +0530

மற்றும் **வா.சா.ஆ.2** ஆன 17.07.2023 தேதியிட்ட கடன் வழக்கப்பட்ட கடிதத்தின் மூலமாகவும், வாதி, பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பானது 08.01.2025 தேதியிட்ட **வா.சா.ஆ.4ன்** மூலமாகவும், மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டார் என்பதனை 11.01.2025 தேதியிட்ட **வா.சா.ஆ.5** ஆன Track report**ன்** மூலமாகவும், பிரதிவாதியின் கடன் நிலுவைத்தொகை தொடர்பான அறிக்கை விபரம் **வா.சா.ஆ.6ன்** மூலமாகவும் அறியமுடிகிறது.

**(5.5)** வாதி வங்கியிடம் பிரதிவாதி தாவா கடன் ஒப்பந்தம் ஆவணம் எழுதிக்கொடுத்து கடன் தொகை பெற்றுள்ளார் என்பதையும், அந்தக்கடன் தொகையான ரூ.40,000/–த்தில் பிரதிவாதி திருப்பி செலுத்தியது போக மீதமுள்ள நிலுவைத்தொகை ரூ.20,465/– தொகையை செலுத்தாமல் பாக்கி வைத்துள்ளார் என்பதையும் வாதி உரிய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் **இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101–ன்படி எவர், எதை, எக்கூற்றை சொல்கிறாரோ அவரே அக்கூற்றை நிரூபிக்க வேண்டும்** என்ற வகையில் வாதி தன் வழக்கை நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

வாதி தன் வழக்கை மேற்படி சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ள நிலையில், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், கடந்த 07.07.2025 அன்று பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டு, ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் இந்த வழக்கினை மறுதலித்து கட்சி நடத்த வாய்ப்பு இருந்தும் அவர் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

**(5.6)** வாதி அவரது தரப்பு வழக்கை நிரூபணம் செய்துள்ளதால் இவ்வழக்கில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும், வாதி தாவா தொகைக்கு பின்வட்டி கோரியிருப்பது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 34–ன் படி தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதிவரை



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.01 17:57:27 +0530

12% வட்டிக்கு அதிகமாக இருக்கக்கூடாது என்பதால் வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதிவரை 12% வட்டியும், பின்னிட்டு தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தும் தேதி வரையில் தாவா தொகையான ரூ.20,465/-க்கு ஆண்டுக்கு 6% பின்வட்டி சேர்த்து வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்றும், இவ்வழக்கின் செலவுத்தொகையையும் பிரதிவாதி, வாதிக்கு செலுத்த வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இவ்வழக்கின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில்,** இவ்வழக்கானது செலவுத்தொகையுடன் தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டு, தாவா தொகையான ரூ.20,465/-ஐ பிரதிவாதி, வாதிக்கு திருப்பிச் செலுத்த வேண்டுமென்றும், தாவா தொகை ரூ.20,465/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதிவரை ஆண்டுக்கு 12% வட்டியும், பின்னிட்டு தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தும் தேதிவரையில் ஆண்டுக்கு 6% பின்வட்டி சேர்த்து வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.01 17:57:33 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**
**வாதி தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 திரு. அருள்குமார் (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 18.07.2023 | கடன் ஒப்பந்தம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 17.07.2023 | கடன் வழங்கல் கடிதம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 14.11.2024 | வாதி வங்கியால் கிளை மேலாளருக்கு வழங்கப்பட்ட அதிகார கடிதம் |
| வா.சா.ஆ.4 | 08.01.2025 | வழக்கறிஞர் அறிவிப்பு கையிருப்பு நகல் |
| வா.சா.ஆ.5 | 11.01.2025 | வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான Track Report கணிணி பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.6 | .. | பிரதிவாதியின் கடன் நிலுவை தொடர்பான அறிக்கை |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள்** – இல்லை –
**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** – இல்லை –

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.01 17:57:39 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**சீர்காழி.**

**நேரிய/வரைவு தீர்ப்புரை**
அசல் வழக்கு எண். 39/2025
நாள்: 01.04.2026.